www.Padasalai.Net www.CBSEtips.in

FSS

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2022

10 - ஆம் வகுப்பு

தமிழ்

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

I எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி. 10 X 2 = 20

1. பெருஞ்சித்திரனார் படைத்த நூல்கள் நான்கினை கூறுக.
2. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?
3. அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. வசன கவிதை - குறிப்பு வரைக.
5. விரிச்சி என்றால் என்ன?
6. வேங்கை என்பதைத் தனிமொழியாகவும், தொடர் மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
7. இறடிப் பொம்மல் பெறுகுவீர் - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
8. நற்றிணை நூலில் விருந்தோம்பல் பண்பு குறித்த கருத்து யாது?
9. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?
10. 'நிமிர்ந்த மா அல் போல' உவமையை விளக்குக.
11. பொருத்துக.

    1) கொண்டல் - மேற்கு

    2) கோடை - தெற்கு

    3) வாடை - கிழக்கு

    4) தென்றல் - வடக்கு

12. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களை கண்டுபிடித்து எழுதுக.

    (குவியல், குலை, மந்தை, கட்டு)

| சொல் | கூட்டப்பெயர் |
|---|---|
| கல் | |
| பழம் | |
| புல் | |
| ஆடு | |

II எவையேனும் இரண்டனுக்கு விடையளி. 2 X 4 = 8

13. காசிக் காண்டம் உணர்த்தும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கங்களைக் கூறு.
14. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு சுட்டுவன யாவை?
15. தமிழழகனார் தமிழையும், கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

III அடிபிறழாமல் எழுதுக. 4 + 2 = 6

16. "அன்னை மொழியே" - எனத்தொடங்கும் பாடல் வரிகளை எழுதுக.

17. "எப்பொருள்" - எனத்தொடங்கும் திருக்குறளை எழுதுக.

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5 X 1 = 5

18. தமிழுக்குரிய அணிகலன் ........... .

அ) இரட்டைக் காப்பியம் ஆ) ஐம்பெரும் காப்பியம் இ) எட்டுத்தொகை

19. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்

அ) எம் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எந் + தமிழ் + நா

20. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை

அ) குலைவகை ஆ) மணிவகை இ) இலை வகை

21. சார்பெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?

அ) எட்டு ஆ) பத்து இ) மூன்று

22. 'பெரிய மீசை' சிரித்தார் - இதில் கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை இ) உவமைத்தொகை

V பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி. 4 X 1 = 4

23. *"முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்*
*மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்*
*அணைகிடந்தே சங்கத் தவர்க்காக ஆழிக்கும்*
*இணைகிடந் தேதமிழ் ஈண்டு"*

வினாக்கள் :

1. இப்பாடல் இடம் பெறும் நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. முத்தமிழ் விரித்தெழுதுக. பிரித்தெழுதுக.
4. 'ஆழி' என்பதன் பொருள் கூறுக.

VI ஏதேனும் ஒன்றுக்கு விடையளி. 7 X 1 = 7

24. தமிழரின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும், தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

*(அல்லது)*

25. மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்ற தலைப்பில் கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2022 ( சேலம் )
## பத்தாம் வகுப்பு தமிழ்
## விடைக்குறிப்பு

**I எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளி** **10X2=20**

**1. பெருஞ்சித்திரனார் படைத்த நூல்கள்:**

| | |
|---|---|
| ❖ உலகியல் நூறு | ❖ பாவியக்கொத்து |
| ❖ நூறாசிரியம் | ❖ கனிச்சாறு |
| ❖ எண்சுவை எண்பது | ❖ மகபுகுவஞ்சி |
| ❖ பள்ளிப்பறவைகள் | |

**( எவையேனும் நான்கு நூல்கள் எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்குக )**

**2. பூவின் நிலைகள்**

| | | |
|---|---|---|
| ❖ அரும்பு | ❖ போது | ❖ மலர் (அலர்) |
| ❖ வீ | ❖ செம்மல் | |

**3. அளபெடை வகைகள்**

❖ அளபெடை **இரண்டு** வகைப்படும்.

❖ உயிரளபெடை, ஒற்றளபெடை

**4. வசன கவிதை**

❖ உரைநடையும் கவிதையும் இணைந்து **யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு** உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது.

❖ ஆங்கிலத்தில் Prose Poetry ( free verse ) என்றழைக்கப்படும் இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

**5. விரிச்சி:**

❖ ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என ஐயம் கொண்ட பெண்கள், மக்கள் நடமாட்டம் குறைவாக இருக்கும் ஊர்ப்பக்கத்தில் போய், தெய்வத்தைத் தொழுதுநின்று அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர்,

❖ அவர்கள் நல்ல சொல்லைக் கூறின் தம் செயல் நன்னையில் முடியும் என்றும் தீய மொழியைக் கூறின் தீதாய் முடியும் என்றும் கொள்வர்.

**6. வேங்கை**

❖ வேங்கை – தனிமொழியாக வேங்கை என்னும் **மரத்தைக்** குறிக்கும்.

❖ வே + கை – தொடர்மொழியாக **வேகின்ற கை** எனப் பொருள் தரும்.

**7. இறடிப் பொம்மல் பெறுகுவீர் :**

❖ இறடி – தினை

❖ பொம்மல் – சோறு

நவிர மலை மக்களின் தலைவனான நன்னனின் இடத்திற்குச் செல்லும் கூத்தர்கள் அங்குள்ள வீடுகளில் **தினைச்சோற்றை உணவாகப் பெறுவீர்கள்** என்று எதிர்வரும் கூத்தர்களிடம் ஆற்றுப்படுத்துகின்றனர்.

**8. நற்றிணை கூறும் விருந்தோம்பல்**

**நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு** குடும்பத் தலைவிக்கு உண்டு என்று நற்றிணை குறிப்பிடுகிறது.

**9. உயிரினும் ஓம்பப்படும்**

❖ உயிரினும் ஓம்பப்படுவது **ஒழுக்கம்.**

❖ ஒழுக்கம் **எல்லார்க்கும் சிறப்பைத் தருவதால்** அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகப் பேணிக்காத்தல் வேண்டும்.

**சுந்தரராஜன் மா 9566585860**

SRV MATRIC HR SEC SCHOOL

**10. நிமிர்ந்த மாஅல் போல :**
வலம்புரிச்சங்கு பொறித்த கைகளையுடைய **திருமால்**, குறுகிய வடிவம் கொண்டு மாவலி மன்னன் நீர்வார்த்து தரும்பொழுது, **மண்ணுக்கும் விண்ணுக்குமாக பேருருவம்** எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம்.

**11. பொருத்துக.**

1) கொண்டல் - கிழக்கு
2) கோடை - மேற்கு
3) வாடை - வடக்கு
4) தென்றல் - தெற்கு

**12. கூட்டப்பெயர்கள்**

கற்குவியல், பழக்குலை, புற்கட்டு, ஆட்டுமந்தை

**II எவையேனும் இரண்டனுக்கு விடையளி** **4X2=8**

**13. விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கம்**

- விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை **வியந்து உரைத்தல்**.
- நல்ல சொற்களை **இனிமையாகப் பேசுதல்**.
- **முகமலர்ச்சியுடன்** அவரை நோக்குதல்.
- **'வீட்டிற்குள் வருக'** என்று வரவேற்றல்.
- அவர் **எதிரில் நிற்றல்**.
- அவர்மனம் **மகிழும்படி பேசுதல்**
- அவர் **அருகிலேயே** அமர்ந்துகொள்ளுதல்.
- அவர் விடைபெற்று செல்லும்போது **வாயில்வரை பின்தொடர்ந்து செல்லல்.**
- அவரிடம் புகழ்ச்சியாக **முகமன் கூறி வழியனுப்புதல்.**
  ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகும்.

**14. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு சுட்டுவன:**

- அழகு நிறைந்த **செழுந்தமிழ்**.
- **பழமைக்கு பழமையாய்** தோன்றிய நறுங்கனி.
- கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் **நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசு.**
- **பாண்டிய மன்னனின் மகள்.**
- **திருக்குறளின்** பெரும் பெருமைக்குரியவள்.
- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, நிலைத்த சிலப்பதிகாரம், அழகான மணிமேகலை போன்ற இலக்கியங்களை உடையவள்.
  எனவே தமிழன்னையை தலைபணிந்து வாழ்த்துவதாக பாவலரேறு கூறுகிறார்.

**15. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கு**

**தமிழ் :**

- தமிழ், இயல் இசை நாடகம் என **முத்தமிழாய்** வளர்ந்தது.
- முதல் இடை கடை ஆகிய **முச்சங்கங்களால்** வளர்க்கப்பட்டது.
- ஐம்பெருங்காப்பியங்களை **அணிகலன்களாகப்** பெற்றது.
- சங்கப் பலகையில்அமர்ந்திருந்த **சங்கப்புலவர்களால்** காக்கப்பட்டது.

**கடல் :**

- கடல், **முத்தினையும் அமிழ்தினையும்** தருகிறது.
- வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய **மூன்று வகையான சங்குகளைத்** தருகிறது.
- மிகுதியான **வணிகக் கப்பல்கள்** செல்லும்படி இருக்கிறது.
- தன் அலையால் **சங்கினைத் தடுத்து நிறுத்திக்** காக்கிறது.

இவ்வாறு தமிழழகனார் தமிழையும் கடலையும் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

SRV MATRIC HR SEC SCHOOL

**III அடிபிறழாமல் எழுதுக. 4+2=6**

**16. அன்னை மொழியே**

**- பாவலரேறு பெருஞ்சித்திரனார்.**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

**17. திருக்குறள்**

**மெய் உணர்தல்**

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளி 5X1=5**

| | | |
|---|---|---|
| 18. ஆ)ஐம்பெருங்காப்பியங்கள் | 19. அ) எம் + தமிழ் + நா | 20. ஆ) மணிவகை |
| 21. ஆ) பத்து | 22. ஆ)அன்மொழித்தொகை | |

**V பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க 4X1=4**

23.

| | |
|---|---|
| 1) இரட்டுறமொழிதல் | 2) தமிழழகனார் |
| 3) இயல், இசை, நாடகம். மூன்று + தமிழ் | 4) கடல் |

**VI ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி 1X7=7**

**24. தமிழரின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கதிற்கான தேவை குறித்தும், தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு**

- தமிழின் சிறப்புகள்
- தமிழ்ச்சொல்வளம்
- புதிய சொல்லாக்கத்திற்கான தேவை

**( பொருத்தமான கருத்துகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக )**

**அல்லது**

**25. தோழனை வாழ்த்தி மடல்**

- இடம், நாள் (வலப்புறம்)
- விளித்தொடர்
- கடிதச்செய்தி
- முடிவு, ஒப்பம்
- உறைமேல் முகவரி

**சுந்தரராஜன் மா**
**B.Lit., M.A., B.Ed., D.T.Ed**
**9566585860**
**ஸ்ரீராம் வித்யாலயா மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி,**
**பொட்டனேரி, சேலம் - 636453.**

SRV MATRIC HR.SEC.SCHOOL